වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

2025

ජනමාධ්‍ය අංශය
வெகுசன ஊடகப் பிரிவு
Mass Media Division

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
Ministry of Health and Mass Media

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

வெகுசன ஊடக அமைச்சு

தலைப்பு : 111

2020.01.30 ஆம் திகதி அரச நிதித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்திற்கமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

	பக்கம்
அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	01 - 14
அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	15 - 42
அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	43 - 52
அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்	53 - 56
அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	57 - 62
அத்தியாயம் 06 – மனித வள விபரம்	63 - 72
அத்தியாயம் 07– இணக்கப்பாட்டு அறிக்கை	73 – 84
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	85 - 90

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

1.3. பிரதான செயற்பாடுகள்

1.4. நிறுவன விளக்கப்படம் - 2025

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் /நிதியங்கள்

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

அ) கருத்திட்டம்

ஆ) கொடை வழங்கும் முகவர் நிறுவனம்

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு

ஈ) கருத்திட்டக் காலம்

1.0 வெகுசன ஊடக அமைச்சு

1.1 அறிமுகம்

நாட்டில் மக்கள் நலன் சார்ந்த, அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட, சுதந்திரமான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய ஊடகக் கலாசாரத்தை ஸ்தாபிப்பதற்கு வெகுசன ஊடக அமைச்சு முன்னுரிமை அளித்து வருகின்றது. ஊடகத்துறையின் நிலையான அபிவிருத்திக்குத் தேவையான கொள்கை மற்றும் நிறுவன ரீதியான ஒத்துழைப்பை வழங்குவதுடன், உள்நாட்டு பொதுசன அபிப்பிராயத்தை நேர்மறையான திசையில் வழிநடத்தக்கூடிய பொறுப்புமிக்க ஊடகப் பயன்பாட்டை ஊக்கப்படுத்துவதையும் அமைச்சு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. ஊடகத்துறையின் முன்னேற்றமானது அளவு ரீதியான வளர்ச்சியுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், தரம் சார்ந்த மேம்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும் என அமைச்சு உறுதியாக நம்புகின்றது.

தற்போதைய ஊடகத்துறையின் வளர்ச்சி பாரம்பரிய ஊடகப் பயன்பாடுகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய ஊடகச் சூழல் வரை விரிவடைந்துள்ளது. எனவே, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகக் கருவிகளைச் சரியான முறையில் பயன்படுத்துவது தொடர்பான அறிவு மற்றும் புரிதலை பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் பரப்புவதற்கும், பயனுள்ள தொடர்பாடல் வழிமுறைகளை மேம்படுத்துவதற்கும், டிஜிட்டல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப ஒத்துப்போவதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தேசியப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி, தொடர்ச்சியான நிதி நட்டத்தைப் பதிவு செய்யும் மற்றும் தற்போதுள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்தாத அரசாங்க ஊடக நிறுவனங்களை மறுசீரமைத்து, அவற்றை வினைத்திறனுள்ள நிலைக்குக் கொண்டுவருவது வெகுசன ஊடக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு முக்கிய சவாலாகும். அதற்கமைய, குறித்த நிறுவனங்களின் வணிகச் செயற்பாடுகள் மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்த விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டு, தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டங்களை உரிய காலப் பிரிவுக்குள் நடைமுறைப்படுத்தி, எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு அந்தந்த முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டின் முன்னேற்றத்தை அமைச்சு கண்காணித்து, மேற்பார்வை செய்து வழிகாட்டல்களை வழங்கிவருகின்றது.

ஊடகத்துறையைப் புதிய திசையை நோக்கி நகர்த்தும் நோக்கில், இலங்கையில் வலுவான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய ஊடகக் கொள்கை கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக, 'இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய ஊடகக் கொள்கை' (National Media Policy) தயாரிக்கப்பட்டது. அரசாங்க ஊடகத் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துறைசார் நிபுணர்கள்,

சட்டத்தரணிகள், ஒளிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடக சங்கங்கள் அடங்கிய சுயாதீனமான மாகாணக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அந்த மாகாணக் குழுவினால் இந்தத் தேசிய ஊடகக் கொள்கை தற்போது முழுமையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஊடக ஒழுக்கநெறி (Media Ethics) முறைமை ஒன்றின் அவசியத்தை அமைச்சு இனங்கண்டுள்ளதுடன், அது தொடர்பான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

உயர்ந்த தொழில்சார் திறன்களைக் கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்காக, சர்வதேச தரங்களுக்கு அமைவாக அரசாங்கத்தின் அனுசரணையுடன் 'இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம்' (Chartered Institute of Media Professionals of Sri Lanka) என்ற பெயரில் உயர்கல்வி நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்ட ரீதியான பின்னணி தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கு பட்டயத் தகைமை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில்சார் தகைமையை மேம்படுத்தும் நோக்கில், 'எசிதிசி' ஊடகக் கல்வி புலமைப்பரிசில் திட்டம் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விண்ணப்பதாரர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றிருக்க வேண்டும். பட்டப்படிப்பு அல்லது பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கைகளுக்காக 200,000 ரூபாவும், சான்றிதழ் கற்கைகளுக்காக 100,000 ரூபாவும் இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

தேசியப் பாதுகாப்புக்கும் நல்லிணக்கத்திற்கும் அச்சுறுத்தலாக அமையாத வகையில் செய்தி இணையதளங்களைப் பேணுவது அவசியமெனக் கருதப்படுவதால், இந்த இணையதளங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் சுயாதீனக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊடகவியலாளர்கள் ஆற்றும் சேவையையும் அவர்களின் பங்களிப்பையும் கௌரவிப்பதற்கும், தரமான ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதற்கும், இந்த வருடம் சனாதிபதி ஊடக விருது விழா நடத்தப்பட்டது.

இலங்கையில் வானொலி மற்றும் ஒளிபரப்பு விடயங்களை ஒழுங்குபடுத்தும் அடிப்படைச் சட்டங்களாக 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் என்பன காணப்படுகின்றன. இச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய, தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒளிபரப்புச் சேவைகளைப் பேணுவதற்காக வெகுசன ஊடக அமைச்சினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்களில் ஒருமித்த தன்மையை ஏற்படுத்துவதற்காகப் பொதுவான மாதிரி ஒன்றினை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தயாரிக்கப்பட்ட பொது மாதிரிப் படிவம் சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) வானொலி அலைக்கற்றையின் அதிகபட்ச கொள்ளளவு எல்லை கடந்துள்ளதால், இந்த அமைச்சினால் வானொலி அலைவரிசைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

அவ்வாறே, இலங்கையில் டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு (DTTB) கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் தொலைக்காட்சி அலைவரிசைகளை தரைவழியாக இயக்குவதற்காக, அலைக்கற்றையிலிருந்து அதிர்வெண்களை ஒதுக்கும் செயல்முறையை 2025.11.01 ஆம் திகதி முதல் இடைநிறுத்துவதற்கும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 2025.11.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைக்காட்சி அலைவரிசைகளை தரைவழியாக இயக்குவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறையை இடைநிறுத்துவதற்கும் இந்த அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றால் கூட்டாக சமர்ப்பிக்கப்பட்ட MMI/Ad2/16/2025/1-XLIV இலக்க மற்றும் 2025.10.20 திகதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கு, அப/25/2167/815/147 இலக்க மற்றும் 2025.12.02 திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, இந்த அமைச்சினால் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணிகளும் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, வெகுசன ஊடக அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குரிய காலாவதியான சட்டங்களைத் திருத்தும் பணிகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. குறித்த சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதன் மூலம், அந்த நிறுவனங்கள் ஊடகத்துறையில் நிலவும் கடுமையான போட்டிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடிய வகையில் வலுப்பெறும்.

வெளிநாட்டு டெலி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களை இந்நாட்டு ஊடகங்களில் ஒளிபரப்புவதற்கு அனுமதி வழங்குவது நிபுணர் குழுவொன்றின் மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

செய்தி இணையதளங்களைப் பதிவு செய்தல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வணிக நிகழ்ச்சிகளுக்கான வரிகளை அறவிடுவதன் மூலம், வெகுசன ஊடக அமைச்சு பொதுத் திறைசேரிக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கின்றது.

புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு (Analog) முறையிலிருந்து டிஜிட்டல் (Digital) முறைக்குச் செல்லும் உலகளாவிய போக்குக்கு இலங்கையும் ஒத்துப்போக வேண்டும். புவிசார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் அலைவரிசை அதிர்வெண்கள் வீணாவதோடு, அந்த அலைவரிசை அதிர்வெண்களை ஏனைய தொலைத்தொடர்பு சேவைகளுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பும் இழக்கப்படுகின்றது. அதற்கமைய, ஜப்பானிய கடன் உதவித் திட்டத்தின் மூலம் 'இலங்கையின் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம்' (Digital Terrestrial Television Broadcasting – DTTB Project) நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

'கிளீன் ஸ்ரீ லங்கா' (Clean Sri Lanka) வேலைத்திட்டத்திற்கு அமைவாக, அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான வேலைத்திட்டங்களை இனங்காண்பதற்கு, ஜனாதிபதி செயலகத்தின் விசேட தலையீட்டின் பேரில் அமைச்சினால் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதற்கமைய, 'Clean Sri Lanka' வேலைத்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் திட்டங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், ஜனாதிபதி செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ' Clean Sri Lanka ' செயலகத்தின் நிதியைப் பயன்படுத்தி, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் 'Healthy Food – Happy Life ஆரோக்கியமான வாழ்விற்கு சத்தான/பாதுகாப்பான உணவு' எனும் தேசிய ஊடகத் திட்டமும், சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் 'Take Care - வீதிப் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வு' திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வெகுசன ஊடக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான 'சுபீட்சமான நாடு - அழகான வாழ்வு' என்பதில் ஊடகத் துறைக்கான 5 வருட மூலோபாயச் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், ஜனாதிபதி செயலகத்தின் தலையீட்டுடன் நடைபெறும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைச் செயற்பாடுகளுடன் இணைந்து, வருடாந்த செயல் திட்டங்களின் அடிப்படையில் குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1.2 நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நோக்கு

“நன்றாக அறிவூட்டப்பட்ட பல்லின மற்றும் முனைப்பான சமூகம்."

பணிக்கூற்று

“மக்கள் நேயமுடன், அபிவிருத்தியை நோக்கிய சுதந்திரமானதும் பொறுப்புவாய்ந்ததுமான இலங்கைக்கான ஊடக கலாச்சாரத்தை ஸ்தாபிப்பதற்காக கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வகுத்தல், வசதியளித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டம் செய்தல்"

குறிக்கோள்கள்

- சிறந்த வெகுசன ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
- பொதுமக்களுக்கு தகவல்களை அடைந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
- நவீன தொழில்நுட்பத்துடன் ஊடகத் துறைக்கு வசதிகளை வழங்குதல்.
- ஊடகவியலாளர்களின் தொழில் அந்தஸ்தை உயர்த்துவதற்கு ஊக்கப்படுத்தல்.
- தேசிய அபிவிருத்தி முயற்சியில் ஊடகப் பங்களிப்பு மற்றும் பங்கேற்பை அதிகரித்தல்.
- சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- அமைச்சின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான மனிதவள அபிவிருத்தியை கட்டியெழுப்புதல்.
- அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் வளங்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல்.
- ஏற்புடை தரப்பினர்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் மொத்த அபிவிருத்தி செயன்முறையையும் வலுவூட்டல்.

1.3 வியடப் பரப்பு, பணிகள், செயற்பாடுகள் மற்றும் விசேட முன்னுரிமைகள்

1.3.1 விடயப் பரப்பு

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட, சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொதுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற தகவல், அறிவு மற்றும் கருத்துகளின் சமநிலையான தொடர்பாடலுக்கான பொருத்தமான ஊடகக் கலாசாரத்தை உருவாக்குதல் அத்துடன் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையில் 'வெளிப்படைத்தன்மையுடனான ஊடகக் கலாசாரமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக' உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊடகத்துறை சார்ந்த கொள்கைவகுப்பு, தேசிய வரவுசெலவுத் திட்டம், அரசாங்க முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் உள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்னூட்டம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

1.3.2 பணிகள் மற்றும் செயற்பாடுகள்

- அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் பத்திரிகை மற்றும் தொடர்புடைய துறைகள் மற்றும் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் விடயப்பரப்பு தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல், செற்படுத்தல், பின்னூட்டம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- விடயப் பரப்பின் கீழ் உள்ள பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனுடனும் நட்புறவு அடிப்படையிலும் வழங்குதல்.
- வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சின் வகிபாகத்தை நிறைவேற்றுவதை உறுதிசெய்ய நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- சரியான தகவல்களை அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அரசாங்க அச்சிடல் மற்றும் வெளியீடுகள்.
- மக்களின் அறிவு மனப்பான்மை மற்றும் இரசனையை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு வெகுசன ஊடகங்களின் பங்களிப்பிற்கு தேவையான மூலோபாயங்களை தொகுத்தல்.
- ஊடக பயன்பாட்டிற்கு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரித்தல்.

- ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்.
- அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் செய்திகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தத தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு இலங்கை பற்றிய பொருத்தமான தகவல்களை வழங்குதல்.
- வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு தேவையான தகவல் மற்றும் விளம்பர சேவைகளை வழங்குதல்.
- செய்திகள், திரைப்படங்கள் மற்றும் ஆவணப்பட நிகழ்ச்சிகளின் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- வர்த்தக தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் மற்றும் வெளிநாட்டு ஒளிபரப்புகள் உட்பட விளம்பர நடவடிக்கைகள்
- நவீன தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி பன்முகத்தன்மையின் மூலம் வர்த்தக நோக்கிலான நவீன அஞ்சல் சேவையை வழங்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அஞ்சல் சேவைகளை திறமையாகப் பேணுதல்.
- இலங்கைப் முத்திரைப் பணியகத்தின் நிர்வாகம்.
- திணைக்கள, நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயப் பரப்புகளுக்குமுரிய நடவடிக்கைகள்.
- திணைக்கள, நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபங்களின் மேற்பார்வை.

1.3.3 விசேட முன்னுரிமைகள்

- வெளிப்படைத்தன்மையுள்ள வெகுசன ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஊடகத் தரங்களை நிறுவுதல்.
- ஊடகவியலாளர்களின் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு கலாசார பெறுமானங்கள் மற்றும் விழுமியங்களின் வட்டத்தை மீறிச் செல்லாது செயலாற்றுவதற்கான பின்னணியை தயாரித்தல்.
- இலங்கைப் பத்திரிகைப் பேரவையை மீள்கட்டமைத்தல்.
- ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு மாகாண மட்டத்தில் நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கை அஞ்சல் சேவையை மக்கள் தேவைக்காக விஸ்தரித்தல்.

- சமூக ஊடகங்கள் உட்பட புதிய ஊடகங்களின் பயன்பாடு மற்றும் கையாளுதல் பற்றிய தொழில்முறை அறிவு மற்றும் புரிதலை வழங்க ஒரு சமூக கல்வி முறையை அறிமுகப்படுத்துதல்.
- சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஊடக உயர் கல்வி தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை நிறுவுதல்.
- நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் திறமையான மற்றும் வினைத்திறன்மிக்க மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் அஞ்சல் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கு தேவையான நுட்பங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தல்.

1.4 நிறுவன விளக்கப்படம் - 2025



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

i) அரசாங்க தகவல் திணைக்களம்

ii) அரசாங்க அச்சகத் திணைக்களம்

III) இலங்கை அஞ்சல் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

i) தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

ii) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

iii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

iv) வ/ப சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு

v) வ/ ப ஐக்கிய பத்திரிகைக் கம்பனி (லேக் ஹவுஸ் நிறுவனம்)

vi) இலங்கைப் பத்திரிகைப் பேரவை

vii) இலங்கை மன்றம்

viii) இலங்கை அச்சக நிறுவனம்

ix) வ/ப லங்கா புவத் நிறுவனம்

x) இணையவழிமுறைகளின் பாதுகாப்புக்கான ஆணைக்குழு

xi) இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனம்

xii) செலசினே மீடியா சொலூஷன் தனியார் நிறுவனம்

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

அ) கருத்திட்டத்தின் பெயர்: இலங்கையில் புவிசார் ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம்.

ஆ) கொடைவழங்கும் முகவர்: ஜப்பான் அரசு (JICA)

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ஜப்பான் யென் மில். 17,222 (JICA நிறுவனத்தின் பங்களிப்பு பெறுமதி ஜப்பான யென் மில். 13,717 உம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ஜப்பான் யென் மில். 3,505 உம் ஆகும்.)

ஈ) கருத்திட்டக் காலம்: 2021 – 2028

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 வெற்றிகள்

2.1.1 2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

2.1.2 தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குதல்

2.1.3 உத்தியோகபூர்வ தகவல் அறியும் உரிமை இணையதளத்தை (www.rti.gov.lk) பேணிவரல் மற்றும் இற்றைப்படுத்தல்

2.1.4 தகவல் அறியும் உரிமை தொடர்பான மின்னஞ்சலை (rtiunitsl@gmail.com) பராமரித்தல்

2.1.5 தகவல் அறியும் உரிமை பற்றிய தகவல் அலுவலர் கையேடு மற்றும் பயிற்சி வழிகாட்டி மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகம்

2.1.6 பொது அதிகாரசபைகளின் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களின் தரவுத் தளத்தை (Data Base) இற்றைப்படுத்தல்

2.1.7 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முகநூல் பக்கத்தைப் Facebook பராமரித்தல் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்தல்

2.1.8 தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2.1.9 சர்வதேச தகவல் அறியும் உரிமைத் தினத்தைக் கொண்டாடுதல் - 2025

2.1.10 'பவத்த' செய்தித்தாள் இதழ் வெளியீடு

2.1.11 தேசிய ஊடக கொள்கையொன்றைத் தயாரித்தல்

2.1.12 அரசாங்க அனுசரணையுடன் ஊடக உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவுதல்

2.1.13 ஜனாதிபதி ஊடக விருது விழா - 2025

2.1.14 செய்தி இணையத்தளங்களை பதிவுசெய்தல்

2.1.15 வானொலி மற்றும் தொலைகாட்சி ஒளிபரப்புக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்

2.1.16 பெண்கள் மற்றும் இன-மத சிறுபான்மையினரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் வகையில் பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்தல்

2.1.17‘எசிதிஸி’ வெகுசன ஊடக புலமைப் பரிசில் திட்டம்

2.1.18 இறக்குமதி செய்யப்படும் டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடுதல்

2.1.19 ஊடக விடயப் பரப்புக்குள் வரும் இணைந்த நிறுவனங்களின் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்தல்

2.1.20 இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல்

2.2 சவால்கள்

2.2.1 அரசாங்க ஊடக நிறுவனங்களை சுயநிதி ஏற்பாடுகளின் கீழ் இயங்கும் நிறுவனங்களாக மாற்றுதல்.

2.2.2 சமூக ஊடகங்களின் அதிவேக விரிவாக்கமும் போலித் தகவல்கள் பரவுதலும்.

2.2.3 தொழில்சார் ஒழுக்கநெறிகள் தொடர்பான பிரச்சினைகள்

2.2.4 தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி மட்டங்கள்

2.2.5 சமூக ஊடகப் பயன்பாடு பரவலடைந்தமையால் பாரம்பரிய ஊடகத்துறை கடுமையான அழுத்தத்திற்குள்ளாதல்.

2.2.6 டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்குப் பழக்கப்படுதல்.

2.3 எதிர்கால இலக்குகள்

2.1 வெற்றிகள் - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் – 2025

2.1.1 2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமயப்படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக அமைச்சுக்குரியதாகும். 2017 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகளை நன்றாக செயற்படுத்துவதும் அதனூடாக ஊழலற்ற சிறந்த பொறுப்புள்ள அரசாங்க சேவையை நிறுவுவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தச் சட்டத் தை சமூகமயப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து வெகுசன ஊடக அமைச்சு முனைப்புடன் பங்களிப்புச் செய்துள்ளது.

2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைய வெகுசன ஊடக அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் தகவல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் தகவல்களைக் கோரும் முறையின்படி ஆணைக்குழு ஒருங்கிணைக்கப்பட்டது. இதுவரை, ஆண்டு மற்றும் அரையாண்டு அறிக்கைகள் மற்றும் இருமாத நிலமை அறிக்கைகள் 07 தகவல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, பிரஜைகள் அல்லது பொது அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்த தகவல்கள் மற்றும் தகவல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறுபட்ட கோரிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுபப்பட்டுள்ளன.

2.1.2 தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குதல்

2025 ஆம் ஆண்டில் இது தொடர்பாக முறையான ஆலோசனை சேவைகள் தினசரி அடிப்படையில் வழங்கப்படுகின்றது. 2025.12.31 ஆம் திகதி வரை அதிகமான நபர்களுக்கு முறையான ஆலோசனைகள் எழுத்துமூலமும் தொலைப்பேசி மூலமும் வழங்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் சட்டம் தொடர்பாக பிரஜைகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதுடன், தகவல் அறியும்

உரிமைச் சட்டம் குறித்து ஆய்வு செய்யவும் ஆராய்ச்சி செய்யவும் வருகைத்தரும் பிரஜைகள் அறிவூட்டப்படுகின்றனர்.

2.1.3 உத்தியோகபூர்வ தகவல் அறியும் உரிமை இணையதளத்தை (www.rti.gov.lk) பேணிவரல் மற்றும் இற்றைப்படுத்தல்

பிரஜைகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை திறம்பட பயன்படுத்த வசதியளிப்பதே இதன் நோக்கமாகும். தகவல் அறியும் உரிமை குறித்த பிரஜைகளின் விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் தகவல் கோரிக்கைகளை பொதுமக்களுக்கு வழங்குவதும் இதன் நோக்கமாகும். தகவல் உரிமைகள் பற்றிய உத்தியோகபூர்வ செய்திகளை வெளியிடுவதும் எதிர்காலத்தில் நடைப்பெறவுள்ள நிகழ்வுகளை விளம்பரப்படுத்தும் பணி என்பன இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் அறியும் உரிமையை மிகவும் பயனுள்ளதாகவும் திறமையாகவும் வழங்குவதற்கு அமைச்சின் உத்தியோகத்தர்களின் கீழ் இயங்கும் இணையதளம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

2.1.4 தகவல் அறியும் உரிமை தொடர்பான மின்னஞ்சலை (rtiunitsl@gmail.com) பராமரித்தல்

பிரஜைகள் மற்றும் அரசாங்கத்துறை அதிகாரிகளினால் அவர்களின் பிரச்சனைகளுக்கு பதில் கேட்டு அனுப்பப்படும் மின்னஞ்சல்களுக்கு தொடர்ச்சியாக பதில் அனுப்பப்படுகின்றது.

2.1.5 தகவல் அறியும் உரிமை பற்றிய தகவல் அலுவலர் கையேடு மற்றும் பயிற்சி வழிகாட்டி மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பிரஜைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் 23 பயிற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும் 5479 உத்தியோகத்தர் கையேடுகள், பயிற்சி வழிகாட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பங்கேற்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்த வெளியீடுகளின் விநியோகம் மூலம் நிறுவனங்களில் உள்ள தகவல் அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2.1.6 பொது அதிகாரசபைகளின் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களின் தரவுத் தளத்தை (Data Base) இற்றைப்படுத்தல்

பொது அதிகாரசபை மூலம் அறிவிக்கப்படும் தகவல் அலுவலர்கள் மற்றும் மேன்முறையீட்டு அலுவலர்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட தரவுத் தளத்தை

(Data Base) அடிப்படையாகக் கொண்ட தகவல்கள் எமது இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதோடு, இந்தத் தகவல்கள் மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன.

2.1.7 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முகநூல் பக்கத்தைப் Facebook பராமரித்தல் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்தல்

விசேடமாக இளைஞர்கள் மற்றும் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் RTI Facebook பக்கம் மூலம் கவர்ச்சிகரமான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. 2025.12.31 ஆம் திகதி வரை இந்தப் பக்கத்தை அணுகியுள்ள மொத்த பயனர்களின் எண்ணிக்கை 3620 ஆகும். மேலும், தகவல் அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தும் போது அன்றைய தினம் முகநூல் பக்கத்தில் Facebook தகவல் வெளியிடப்படும்.

2.1.8 தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு தகவல் சட்டம் குறித்த 25 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன, அதில் பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2410 ஆகும்.

2.1.9 சர்வதேச தகவல் அறியும் உரிமைத் தினத்தைக் கொண்டாடுதல் - 2025

2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச தகவல் அறியும் உரிமைத் தினக் கொண்டாட்டம், செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி இலங்கை மன்ற நிறுவனத்தில் கௌரவ சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அனைத்து அமைச்சுக்களையும் சேர்ந்த 370 தகவல் அதிகாரிகளும் விடயதான அதிகாரிகளும் கலந்துகொண்டனர். 2025 சர்வதேச தகவல் தினக் கொண்டாட்டத்திற்கு இணையாக கிளிநொச்சி, மன்னார், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

2.1.10 'பவத்த' இதழ் வெளியீடு.

'பவத்த' செய்தித்தாள் 2025.09.30 ஆம் திகதி லேக் ஹவுஸ் நிறுவனத்தால் தினமின மற்றும் தினகரன் செய்தித்தாள்களுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறப்பு இதழாக வெளியிடப்பட்டது. மேலும் அதே நேரத்தில் இணையத்திலும் வெளியிடப்பட்டது.

2.1.11 தேசிய ஊடக கொள்கையொன்றைத் தயாரித்தல்

ஊடகத்துறையில் முறையான வழிகாட்டலுக்கான தேசிய ஊடக கொள்கையொன்றை தயாரிப்பதற்கான பணிகளை வெகுசன ஊடக அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது. இதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச ஊடகப் பொறுப்பாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், சட்டத்தணிகள், இலத்திரனியல் வெளியீட்டாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் எழுத்தாளர் குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அக்குழுவினால் அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் இது தொடர்பான கருத்துக்களைப் பெறுவதற்காக பின்வரும் 07 விசேட மையக் குழுக்களின் கீழ் கலந்துரையாடல்களை நடாத்தி தேசிய ஊடகக் கொள்கைக்கான ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டது.

i. ஆய்வாளர்கள்
ii. ஊடக சங்கங்கள்
iii. உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள்
iv. அச்சு மற்றும் இலத்திரனயில் ஊடக நிறுவனங்கள்
v. வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள்
vi. கிழக்கு மாகாண அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள்
vii. பாடசாலை ஊடக சங்கங்கள்

இங்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்த சமூக ஆர்வலர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டதால், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும் 02 குழு விவாதங்கள் (Focus Group Discussions) நடத்தப்பட்டன. இதன் மூலம் அப்பகுதிகளுக்கே உரிய தனித்துவமான பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், புதிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் முடிந்தது.

இந்த முறையான வழிமுறைகளின் ஊடாக அனைத்துப் பங்குதாரர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மிகவும் விவரிக்கப்பட்ட மற்றும் நடைமுறைச் சாத்தியமான வழிகளில் கையாண்டு, ஊடகத்துறையில் தற்போது அவதானிக்கப்படும் பொதுவான பலவீனங்களைத் தவிர்த்து, ஊடகத்துறையை ஒரு புதிய திசையை நோக்கி இட்டுச்செல்லும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட தேசிய ஊடகக் கொள்கையின் ஆரம்பகட்ட வரைவு, தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக 2024.03.28 ஆம் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் கீழ் மீண்டும் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், அதற்கமைய பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின்படி, தேசிய ஊடகக் கொள்கையின் ஆரம்பகட்ட வரைவு தற்போது நிபுணர் குழுவினால் திருத்தப்பட்டுள்ளது. தேசிய ஊடகக் கொள்கையின் இவ்வாறு மேம்படுத்தப்பட்ட வரைவு (Advanced Draft), தற்போது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு மொழிபெயர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2.1.12 அரசாங்க அனுசரணையுடன் ஊடக உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவுதல்

ஊடகத்துறையில் பணிபுரியும் ஊடகவியலாளர்களின் தொழில்முறைத் தகைமையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு, 'இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம்' (Chartered Institute of Media Professionals of Sri Lanka) என்ற பெயரில், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்திற்கு (CA Sri Lanka) நிகரானதொரு சுயாதீன நிறுவனத்தை, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் நிறுவப்பட்டுள்ள பட்டய ஊடக நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க அனுசரணையுடன் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2025.03.19 ஆம் திகதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடன், 'இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனத்தை (Chartered Institute of Media Professionals – Sri Lanka) நிறுவும் சட்டம்' என்ற தலைப்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவை அனுமதி இல. அப/2/0588/815/043 மற்றும் 2025.04.22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கிடைத்துள்ளது.

அந்த அமைச்சரவைத் தீர்மானம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2025.05.20 ஆம் திகதி 'Chartered Institute of Media Professionals of Sri Lanka Bill' சட்டமூலம் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் இணக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக, சட்ட வரைஞரால் 2025.07.14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2.1.13 ஜனாதிபதி ஊடக விருது விழா - 2025

ஊடகவியலாளர்களின் பணி மற்றும் பங்களிப்பைப் பாராட்டுவதற்கும் தரமான ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை வெகுசன ஊடக

அமைச்சு நடத்தியது. இந்த விருது வழங்கும் விழாவில் வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் இணையத்தளங்கள் ஆகிய 04 துறைகளில் 51 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அதன் பின்னர், ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், வருடாந்தம் போதிய நிதி ஒதுக்கப்படாத காரணத்தினாலும் Covid - 19 தொற்று மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியாலும் இந்த விழாவை 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நடத்த முடியாமல் போனது.

ஜனாதிபதி ஊடக விருது விழாவை நடத்துவதற்காக 2024 தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்குரிய ஆக்கங்களைப் பாராட்டி, 'ஜனாதிபதி ஊடக விருதுகள் 2024' விழாவை நடத்துவதற்காக அப்போதைய கௌரவ அமைச்சரினால் 2024.10.01 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டது. எனினும், ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக 2024 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஊடக விருது விழாவை நடத்த முடியாமல் போனதால், அவ்விழா 2025.11.11 ஆம் திகதி நடத்தப்பட்டது. மேலும், 2025 வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி ஊடக விருது விழாவிற்காக 27.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.1.14 செய்தி இணையத்தளங்களை பதிவுசெய்தல்

இலக்கம். 12/1037/37/019-1 மற்றும் 2012.08.13 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, செய்தி இணையத்தளங்கள் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு இணையதளப் பதிவுக்கும் ரூ.25,000.00 மற்றும் வருடாந்த பதிவு புதுப்பித்தலுக்கு ரூ.10,000.00 அமைச்சுக்கு வரவு வைக்கப்பட வேண்டும். 2025.12.31 ஆம் திகதிக்கு அமைச்சின் கீழ் 17 செய்தி இணையதளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் 39 செய்தி இணையதளங்கள் தங்கள் பதிவை புதுப்பித்துள்ளன.

2.1.15 வானொலி மற்றும் தொலைகாட்சி ஒளிபரப்புக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு விடயதானங்களை ஒழுங்குபடுத்தும் அடிப்படைச் சட்டங்களான 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை வானொலி கூட்டுத்தாபனச் சட்டமும், 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டமும் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைகளை நடத்துவதற்கான

அனுமதிப்பத்திரங்களை வழங்கும் இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) வானொலி அலைக்கற்றையின் அதிகபட்ச கொள்ளளவு எல்லை கடந்துள்ளதால், இந்த அமைச்சினால் வானொலி அலைவரிசைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

அவ்வாறே, இலங்கையில் டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு (DTTB) கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் தொலைக்காட்சி அலைவரிசைகளை தரைவழியாக இயக்குவதற்காக, அலைக்கற்றையிலிருந்து அதிர்வெண்களை ஒதுக்கும் செயல்முறையை 2025.11.01 ஆம் திகதி முதல் இடைநிறுத்துவதற்கும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 2025.11.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைக்காட்சி அலைவரிசைகளை தரைவழியாக இயக்குவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறையை இடைநிறுத்துவதற்கும் இந்த அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றால் கூட்டாக சமர்ப்பிக்கப்பட்ட MMI/Ad2/16/2025/1-XLIV இலக்க மற்றும் 2025.10.20 திகதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கு, அப/25/2167/815/147 இலக்க மற்றும் 2025.12.02 திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, இந்த அமைச்சினால் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணிகளும் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

2025 டிசமபர் 31 ஆம் திகதியளவில் செயற்பாட்டிலுள்ள தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அலைவரிசைகளின் எண்ணிக்கை

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	அலை வரிசைகளின் எண்ணிக்கை
வானொலி	18	51
புவிசார்ந்த தொலைக்காட்சி	16	23
மொத்தம்	**34**	**74**

சேவை வழங்கும் நிறுவனங்கள்

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை
கேபல் தொலைக்காட்சி	06
செயற்கைகோள் தொலைக்காட்சி	03
இணையத்தள அடிப்படையிலான தொலைக்காட்சி	03
மொத்தம்	**12**

மேலும், இரண்டு அரசாங்க ஒலிபரப்பு நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக பிராந்திய சேவைகளும் உள்ளிட்ட ஒலிபரப்பு அலைவரிசைகள் 15 பேணப்பட்டு வருகின்றன. அத்தோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக 05 தொலைக்காட்சி சேவைகள் பேணப்பட்டுவருகின்றன. பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உச்சமாக பாதுகாக்கும் அதே வேளையில் சிறந்த ஊடக பாதுகாப்பிற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுமதிப்பத்திரங்களுக்கு ஒருமித்த கருத்தை உருவாக்கும் நோக்கில் பொதுவான மாதிரியொன்றை அறிமுகப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போது, வெகுசன ஊடக அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுமதிப் பத்திரங்களை மீளாய்வு செய்து தயாரிக்கப்பட்ட பொது மாதிரிப் படிவம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2.1.16 பெண்கள் மற்றும் இன-மத சிறுபான்மையினரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் வகையில் பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்தல்

பெண்கள் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கான இலங்கை தேசிய செயல் திட்டத்தின் 2023-2027 கீழ், பெண்கள் மற்றும் இன மற்றும் மத சிறுபான்மையினரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்தும் பணி இந்த அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் அந்தக் குழுவால் வரைவு செயல்முறை முடிக்கப்பட்ட பின்னர் தரப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

2.1.17 “எசிதிஸி” வெகுசன ஊடக புலமைப் பரிசில் திட்டம்

இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் பொருட்டு, ஊடகவியலாளர்களை அறிவு, திறன் மற்றும் அணுகுமுறை ரீதியாக தயார்படுத்தி, ஒரு தொழில்முறை ஊடகக் கலையை நிறுவுவதற்காக, பயிற்சிப் பாடநெறிகள் மூலம் அவர்களின் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை வழங்குவதே "எசிதிசி ஊடகப் புலமைப்பரிசில்" திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின், ஊடகப் பிரிவினால் வருடாந்தம் இந்த புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் 03 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து, முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் பணிபுரியும் 18-55 வயதுக்கு இடைப்பட்ட ஊடகவியலாளர்கள், சுயாதீன ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள், இணைய (Web) ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் தொழில்நுட்பக் கலைஞர்கள் மீளச் செலுத்தத் தேவையற்ற அடிப்படையில் இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு, அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்காக விநியோகிக்கப்படும் ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

பட்டம் மற்றும் முதுமாணிப் பாடநெறிகளுக்கு அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபாவும் (200,000.00), குறுகிய கால அல்லது நீண்ட கால சான்றிதழ் பாடநெறிகள், டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாவும் (100,000.00) இப்புலமைப்பரிசில் நிதியாக வழங்கப்படுகின்றது. இதன் கீழ், புலமைப்பரிசில் பெற்றவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படும் ஊடகத்துறை சார்ந்த பாடநெறிகளைக் கற்றுக்கொள்ள முடியும்.

பயனாளிகளிடமிருந்து எந்தவொரு கட்டணமும் அறவிடமால் அரசாங்கத்தினால் வழங்கப்படும் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், ஊடகவியலாளர்கள் இருமுறை நலன்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகின்றது. முதலாம் தடவை பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த ஊடகவியலாளர்கள், 05 ஆண்டுகள் கடந்த பின்னர் இரண்டாம் தடவைக்காக விண்ணப்பிக்க முடியும்.

புலமைப்பரிசிலுக்குத் தகுதிபெறும் ஊடகவியலாளர்களுக்கான பாடநெறிக் கட்டணத்தில் 50% பாடநெறியின் ஆரம்பத்தில் முதலாம் தவணையாகவும், 25%

இரண்டாம் தவணையாகவும், ஏனைய 25% பாடநெறியை முழுமையாகப் பூர்த்தி செய்து சான்றிதழைச் சமர்ப்பித்த பின்னரும் செலுத்தப்படும்.

2025 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுத் திறைசேரியினால் 07 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் புலமைப்பரிசில்களை வழங்க முடிந்துள்ளது. அதற்கமைய, அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட, அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட 61 ஊடகவியலாளர்கள் இப்புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

2.1.18 இறக்குமதி செய்யப்படும் டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடுதல்

இந்த அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி அறவிடப்படும்.

2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழச்சிகள் 1363 க்கு தடைநீக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அறவிடப்பட்ட வரித்தொகை ரூ.மில். 94.15 ஆகும். அந்தத் தொகை திரட்டு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக ஆய்வுச் சபையின் உறுப்பினர்கள் 30 பேர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு நாளாந்தம் மூவரைக் கொண்ட உப குழுக்கள் மூலம் 355 தடவைகளில் தடைநீக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வரி அறவிடப்பட்ட மற்றும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சிகளின் வகை	வரி விலக்களிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	வரி அறவிடப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	வரி வருமானம் (ரூ.மில்)
திரைப் படங்கள்	1339	02	0.9
டெலி நாடகம் மற்றும் விவரண நிகழ்ச்சிகள்	24	465	67.75
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள்	-	84	25.5
மொத்தம்	**1363**	**551**	**94.15**

2.1.19 ஊடக விடயப் பரப்புக்குள் வரும் இணைந்த நிறுவனங்களின் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்தல்

அமைச்சின் கீழ் வரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் (லேக் ஹவுஸ்), இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் இலங்கை மன்ற நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் நிறுவன யாப்புகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தேவைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளன. அண்மைய காலங்களில் எந்தவித மதிப்பாய்வும் செய்யப்படவில்லை. அத்துடன் அஞ்சல் திணைக்களம், அரசாங்கத் தகவல் திணைக்களம் மற்றும் அரச அச்சகத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் தமது அன்றாட கடமைகளில் பயன்படுத்தும் கட்டளைகள் சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இயற்றப்பட்ட கட்டளைகள் ஆகும். தற்போதைய தேவைகளுக்கு அமைய தனியார் துறை போட்டித் தன்மையுடன் நீண்ட தூரம் பயணித்துள்ள நிலையில் காலாவதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சிக்கித் தவிப்பதால் அரச ஊடகங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் முன்னேற்றம் மந்தமடைந்துள்ளது.

மேலும், இந்த அமைச்சின் விடயப்பரப்புக்குள் வரக்கூடிய விதிமுறைகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு திருத்தப்பட்டு, வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப சமூக ரசனைகளுக்கு ஏற்ப ஊடகத்துறையில் நிலவும் கடும் போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் திருத்தங்கள் செய்யப்படல்

வேண்டும். சுயாதீனமாக வளர்வதற்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்புகளுக்கு இடமளித்து ஏற்கனவே உள்ள சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

ஊடக அமைச்சின் கீழ் உள்ள இணைந்த நிறுவனங்களின் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தும் பணியில் முன்னேற்றம்

(அ) 1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மன்றச் சட்டத்தை திருத்துதல்

அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் சட்டத்தைத் திருத்துவதற்காக 2024.04.01 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, திருத்தப்பட்ட ஆரம்பகட்ட வரைவை 2024.09.18 ஆம் திகதி சட்ட வரைஞர் அமைச்சுக்கு அனுப்பி வைத்ததுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக தற்போதைய அமைச்சரவையின் அனுமதி தேவையெனக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக இலங்கை மன்ற நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் சபையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 'அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிகம் சாரா நிறுவனங்களை மீளாய்வு செய்தல் பற்றிய இலக்கம் 25/0288/802/005 மற்றும் 2025.03.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல் - 2025 ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கான முன்னேற்றம்' எனும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் கீழ், பிரதமரின் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட அப/25/1371/802/005-III மற்றும் 2025.08.19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, இந்நிறுவனத்தின் கட்டமைப்பு குறித்த ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தின் திருத்தம்

1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டமானது தற்கால சமூக மற்றும் கலாசாரப் போக்குகளைப் பிரதிபலிக்கும் வகையில் இற்றைப்படுத்தப்படவில்லை. தற்போது தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன், பத்திரிகைகள் மற்றும் வானொலிக்கு மேலதிகமாக தொலைக்காட்சி, இணையம் மற்றும் சமூக ஊடக வலைப்பின்னல்கள் மக்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவியுள்ளதுடன், அவை மனித வாழ்க்கையில் பலத்த செல்வாக்கையும் செலுத்தி வருகின்றன. அதற்கமைய, ஏதேனும் ஒரு பத்திரிகை அறிக்கை ஏதேனும் ஒரு இலத்திரனியல் ஊடகம் மூலம் ஒளிபரப்பப்பட்ட அல்லது பிரசாரப்படுத்தப்பட்ட பின்னர், அந்த அறிக்கை தொடர்பாக பத்திரிகைப் பேரவையினால் விசாரணையொன்று நடத்தப்படும் சந்தர்ப்பத்தில்,

அவ்விசாரணையின் முடிவாகத் தீர்மானிக்கப்படும் திருத்தம்/ உடன்பாடு/ கட்டளை ஆகியவற்றை, மூல அறிக்கையை ஒளிபரப்பிய அல்லது பிரசாரப்படுத்திய இலத்திரனியல் ஊடகங்களும் ஒளிபரப்ப மற்றும் பிரசாரப்படுத்த வேண்டும் என்பதும் அச்சுப் பத்திரிகைகள்/ சஞ்சிகைகளின் இலத்திரனியல் வெளியீடுகள் அல்லது அச்சுப் பத்திரிகை வடிவில் வெளியிடப்படும் இலத்திரனியல் பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகளைப் பதிவு செய்தல் மற்றும் அவை தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல் ஆகிய பிரதான விடயங்கள் குறித்த விதந்துரைகளை உள்ளடக்கி, 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்துவதற்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு 2025.09.08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரதி ஒன்று, தேவையான மேல் நடவடிக்கைகளுக்காக 2025.10.08 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ) தபால் திணைக்களச் சட்டத்தில் திருத்தம்

- **1989** ஆம் ஆண்டின் இல. **09, 1943** ஆம் ஆண்டின் இல. **23, 1952** ஆம் ஆண்டின் இல. **56, 1958** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்கம் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட **1931** ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தபால் நிலைய பிணை நிதிய கட்டளைச் சட்டம் - **473** ஆம் அதிகாரத்தை திருத்துதல்.

இந்தச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான மேல் நடவடிக்கைகள் குறித்து, அந்தத் திணைக்களம் இதுவரையில் தனது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் வழங்காத காரணத்தினால், அத்திணைக்களத்தினால் அவை வழங்கப்பட்ட பின்னர் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன் அதற்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

- **1955** ஆம் ஆண்டின் **31** ஆம் இலக்க, **1957** ஆம் ஆண்டின் **24** ஆம் இலக்க மற்றும் **1973** ஆம் ஆண்டின் **06** ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட **1908** ஆம் ஆண்டின் அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்ட இல. **11** இன் **190** ஆம் அதிகாரத்தை திருத்துதல்.

இந்தச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான மேல் நடவடிக்கைகள் குறித்து, அந்தத் திணைக்களம் இதுவரையில் தனது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் வழங்காத காரணத்தினால், அத்திணைக்களத்தினால் அவை வழங்கப்பட்ட பின்னர் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன் அதற்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் Chartered Institute of Media Professionals - Sri Lanka என்ற பெயரில் உயர் கல்வி ஊடக நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்தை தயாரித்தல்.

உயர் தொழில்முறைத் தகைமைகளைக் கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்காக, சர்வதேச தரத்திற்கு இணங்க தொழில்முறை நிறுவனமொன்றை நிறுவுவதற்கு 2025.03.19 ஆம் திகதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடன், 'இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் (Chartered Institute of Media Professionals – Sri Lanka) நிறுவுதல் சட்டமூலம்' என்ற தலைப்பில் அமைச்சரவை பத்திரம் புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவை அனுமதி இலக்கம் அப/2/0588/815/043 மற்றும் 2025.04.07 ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சட்டமூலத்தை வரைவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2025.04.30 ஆம் திகதி எமது அமைச்சினால் சட்ட வரைஞருக்கு அறிவிக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகளையும் பெற்றுக்கொண்டு, சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணியைச் சட்ட வரைஞர் திணைக்களம் மேற்கொண்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, இறுதிச் சட்டமூல வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் 2025.12.31 ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(**உ) இலத்திரனியல் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டம்** (**Establishment of the Broadcasting Regulatory Commission Act**)

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் அதிகபட்ச பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், உகந்த ஊடகப் பரவலை உறுதி செய்யும் நோக்கத்துடன், இலத்திரனியல் ஊடகங்களுக்கான 'இலத்திரனியல் ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தை' அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்திற்கு 2023.11.28 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, இறுதி வரைவை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தயாரிக்கப்பட்ட முதற்கட்ட வரைவு, சட்டமா அதிபரின் அவதானிப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சட்டமா அதிபரின் அவதானிப்புகள் 2024.11.01ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எனினும், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான 'வளமான நாடு - அழகான வாழ்வு' என்பதன் ஊடகத்துறை சார்ந்த 'சுதந்திரமான ஊடகக் கைத்தொழில் - சமநிலையான தகவல் சமூகம்' என்பதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், 2025-2029 காலப்பகுதிக்குள் நிறைவடையும் வகையில் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயம் யாதெனில், ஒட்டுமொத்த ஊடகச் செயல்முறையையும் உகந்த முறையில் பேணுவதற்காக 'சுயாதீன ஊடக ஆணைக்குழு' ஒன்றினை நிறுவ வேண்டும் என்பதாகும். அதற்கமைய, இது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரிடமிருந்து இதுவரையில் அனுமதி கிடைக்கப்பெறவில்லை. தேவையான அனுமதி கிடைத்தவுடன் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

2.1.20 இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல்

புவிசார்ந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு (Analog) முறையிலிருந்து டிஜிட்டல் (Digital) முறைக்கு மாறுவதற்கான உலகளாவிய போக்குக்கு இலங்கையும் மாற்றமடைய வேண்டும். தற்போதுள்ள தொழில்நுட்பம் படிப்படியாக காலாவதியாகி ஒளிபரப்பு முறையை பராமரிப்பது மற்றும் கூடுதல் தொலைக்காட்சி அலைவரிசைகளின் தேவையை பூர்த்தி செய்வது போன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இல்லையெனில், மிகவும் திறமையான டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பம் உள்ள போது, (Analog) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அதிர்வெண் (frequency spectrum) வரம்பை வீணடிக்கும். அந்த அதிர்வெண்களின் வீச்சை ஏனைய தொலை தொடர்பு சேவைகளுக்குப் பயன்படுத்தும் சந்தர்ப்பமும் இல்லாமல் போகின்றது.

அதிகமான நாடுகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நோக்கி நகர்வதால், (Analog) ஒளிபரப்பு சாதனங்கள் (Transmitter) வெளிநாட்டு சந்தைகளில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எனவே, அதற்கான தகவல் தொடர்பு சாதனங்களை உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து நமது தேவைக்கேற்ப அதிக விலை கொடுத்து தயாரிக்க வேண்டியுள்ளது. மேலும், புதிய சாதனங்களை கொள்வனவு செய்யும்போது, இந்த சாதனங்களின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக அதிக அளவு அன்னியச் செலாவணியை செலவிட வேண்டியுள்ளது. அது அனைத்து ஊடக நிறுவனங்களும் அரசும் எதிர்கொள்ளும் பெரிய சவாலாகும். மேலும், இந்த தகவல் தொடர்பு சாதனங்களின் மின்சார செலவும் மிக அதிகம். எனவே, இந்த சேவையை இப்படியே தொடர்வதால் சேவை நிறுவனங்களின் செலவு அதிகரிக்கும்.

மேலும், கட்டண தொலைக்காட்சி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இருந்த போதிலும் அந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களின் கட்டணங்கள் காரணமாக பெரும்பாலான குடும்ப அலகுகள் இன்னும் (Analog) ஒளிபரப்பு சேவைகளில் தங்கி உள்ளன.

2009 ஆம் ஆண்டில் DVB - T தொழில்நுட்பம் 2010 ஆம் ஆண்டில் DVB – T2 தொழில்நுட்பத்தின் கீழ் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC) மூலம் தற்போதுள்ள நிலப்பரப்பு (Analog) தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் (Digital) தொலைக்காட்சிக்கு மாற்றி அந்த ஒளிபரப்பை கருத்திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதி பற்றாக்குறையால் கருத்திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது. 2009 ஆம் ஆண்டு முதல் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து டிஜிட்டல் செயலாக்கத்தை (Digitalization) செயல்படுத்துவதில் முன்னணியில் வெகுசன ஊடக மற்றும் தொழில்நுட்ப அமைச்சு செயற்பட்டது. தொழில்நுட்பத் தரங்களை நிலைநிறுத்தி எண்ணியல் செயன்முறை ஒளிபரப்பு திட்டத்தை (Digital Broadcasting Road Map) தயாரிப்பதற்கு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் கருத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, ஜப்பானின் (JICA) நிறுவனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வின் பின்னர், இலங்கைக்குப் பொருத்தமான வகையில் ஜப்பானின் ISDB-T தொழில்நுட்பத்தை வடிவமைக்க முன்மொழியப்பட்டது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் DVB-T2 தொழில்நுட்பத்திற்குப் பதிலாக ISDB-T தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு உடன்பாடு எட்டப்பட்டது. இந்த டிஜிட்டல்மயமாக்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2014 செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் ஜப்பானிய சலுகைக் கடன் உடன்படிக்கையொன்றில் (Soft Loan Agreement) கையெழுத்திட்டதுடன், 2014 அக்டோபர் மாதத்தில் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு அதன் பணிகளை ஆரம்பித்தது.

2021 டிசம்பரில் நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டிருந்த இந்தத் கருத்திட்டம் திட்டமிட்டபடி செயல்படுத்தப்படாததால், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மற்றும் தொழில்நுட்ப அமைச்சரால் 2021 ஏப்ரல் 21 தேதியிட்ட “ஜப்பான் கடனுதவியுடன் இலங்கையின் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம் (SL-P112) எனும் தலைப்பினலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அப21க/0621க/316/016 மற்றும் 2021.04.28 ஆம் திகதி எடுக்கப்பட் தீர்மானத்திற்கு அமைய இந்தக் கருத்திட்டத்தை

இற்றைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை (Digital) மாற்றியமைப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு மிகப்பெரிய நன்மை என்னவெனில் தற்போது பயன்பாட்டில் உள்ள அதிர்வெண் அலைவரிசையை (Frequency Spectrum) அதிகமாக வெளியிடும் திறன் உள்ளது. எனவே, அந்த அதிர்வெண் வரம்பானது 5G கம்பங்கள் இன்றிய (Broadband) சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுத்த முடியும். இதன் மூலம் தொழில்நுட்பத்தை கிராமங்களுக்கும் எடுத்துச்செல்ல முடியும். அதே போன்று எதிர்காலத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையையும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

அனைத்து ஒளிபரப்பாளர்களினால் பேணிவரப்படும் தனியான ஒளிபரப்புக்குப் பதிலாக எண்ணியல் (Digital) ஒளிபரப்பு வலையமைப்பு இயக்குநர் (Digital Broadcast Network Operator - DBNO) தனியான இயக்குநராக இயங்கும் நன்மையைக் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் பெறுகின்றார்.

அவ்வாறே, காலாவதியான அனலாக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒளிபரப்பு நிலையங்களின் பராமரிப்புக்காக ஒளிபரப்பாளர்கள் ஆண்டுதோறும் நிறைய பணம் செலவழிக்க வேண்டும், மேலும் திட்டம் முடிந்ததும் அவர்கள் தனிப்பட்ட ஒளிபரப்பு வலையமைப்புக்களைப் பராமரிக்கத் தேவையில்லை. இது பராமரிப்பு செலவுகளையும் வெகுவாகக் குறைக்கும்.

(Analog) முறையியலில் உள்ள பலவீனமான சமிக்ஞைகளுக்குப் பதிலாக உயர் இலக்க (Digital) வீடியோ படங்களைப் பார்க்கும் திறன், பல தொலைக்காட்சிகளுக்குப் பதிலாக அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் வீட்டில் ஒரு எண்டெனாவை நிறுவும் திறன் மற்றும் ரசிக்கும் திறன் அனைத்து உள்நாட்டு அலைவரிசைகளும் சமமாக பார்வையிடும் நன்மை உயர் (High Definition - HD) தொலைக்காட்சி பார்வையாளருக்கு கிடைக்கும் நன்மையாகும்.

கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் இத்திட்டம் (DTTB Platform) தொடர்பான அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் (NOC Operations) ஒலிபரப்பு நடவடிக்கைகளும் கொழும்பு தாமரைக் கோபுரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 17,717 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். (JICA) நிறுவனத்தின் பங்களிப்பு 13,717 மில்லியன் ஜப்பானிய யென் மற்றும் அரசாங்க பங்களிப்பு 3,505 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும்.

கருத்திட்ட முகாமைத்துவ அலகு நிறுவப்பட்டு, 2021.07.15 ஆம் திகதி இச்செயற்திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பொறியியல் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, (JICA) நிறுவனத்தின் உடன்பாட்டுடன் ஜப்பானிய ஆலோசனைச் சேவை நிறுவனமொன்று, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை முகமைத்துவக் குழுவினால் (CPCC) தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022.08.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அக்காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக (JICA) நிறுவனம் அனைத்து ஜப்பானிய செயற்திட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடுகளைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்ததால், அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பொறியியல் ஆலோசனைச் சேவை வழங்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய, 2024 ஜூலை மாத இறுதிக் பகுதியில் (JICA) நிறுவனத்தினால் நிதி ஒதுக்கீட்டின் மீதான தற்காலிகத் தடை நீக்கப்பட்டதுடன், 2024 செப்டம்பர் மாதத்தில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், இச்செயற்திட்டம் குறித்து விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, செயற்திட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

டிசம்பர் 31 வரை கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

- சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியன இணைந்து சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், இச்செயற்திட்டத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2025.01.09 ஆம் திகதி அமைச்சரவையினாதல் அனுமதி வழங்கப்பட்டது. குறித்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, செயற்திட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகளைத் தீர்மானிப்பதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழுவின் முதலாவது கூட்டம் 2025.01.20 ஆம் திகதி நடைபெற்றது.
- அதனைத் தொடர்ந்து, 2025.02.24 ஆம் திகதி அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் மூலம், இச்செயற்திட்டத்திற்கான பொறியியல் ஆலோசனைச் சேவை உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவதற்கும், செயற்திட்டத்தின் ஏனையத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

- அதற்கமைய, 2025 மார்ச் மாதம் 12 ஆம் திகதி வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், டிஜிட்டல் அமைச்சின் பதில் செயலாளர், ஜப்பானிய தூதரக அதிகாரிகள், (JICA) பிரதானிகள் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொறியியல் ஆலோசனைச் சேவை நிறுவனத்தின் அதிகாரிகள் சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடி, செயற்திட்டத்தின் பொறியியல் ஆலோசனைச் சேவை உடன்படிக்கையில் கையெழுத்திடுவது மற்றும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்களை விரிவாகக் கலந்துரையாடி உடன்பாட்டிற்கு வந்தனர்.

- அமைச்சரவை அனுமதியைப் பெற்ற குழுவின் இரண்டாவது கூட்டம் 2025.04.03 ஆம் திகதி நடைபெற்றதுடன், அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பின்னர், உரிய ஆலோசனைச் சேவை உடன்படிக்கையானது 'யச்சியோ பொறியியல் ஆலோசனைச் சேவை நிறுவனத்திற்கும்' (Yachiyo Engineering Co., Ltd) வெகுசன ஊடக அமைச்சுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கான (JICA) நிறுவனத்தின் இணக்கம் (Concurrence) 2025 மே மாதம் 14 அன்று கிடைத்ததுடன், அதற்கமைய 2025 ஜூன் 09 ஆம் திகதி பொறியியல் ஆலோசனைச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- 2025 ஜூன் 09 ஆம் திகதி செயற்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தொழில்நுட்பப் பொறியியல் குழு, ஆலோசனைக் குழு, வெகுசன ஊடக அமைச்சின் அதிகாரிகள் மற்றும் செயற்திட்டப் பணிப்பாளர் ஆகியோர் ஒளிபரப்புக் கோபுரங்களைக் கண்காணிப்பதற்கான களப் பரிசோதனையை மேற்கொண்டதுடன், அங்கு இதற்கு முன்னர் கண்டறியப்பட்ட 16 இடங்கள் குறித்து ஆரம்பகட்ட ஆய்வுகளை நடத்தினர். அதன் அடிப்படையில், இறுதிச் செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

- மேற்குறிப்பிட்ட ஆரம்பகட்ட ஆய்வுகளின் மூலம், முன்மொழியப்பட்டிருந்த 09 புதிய ஒளிபரப்புக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்குப் பதிலாக, தற்போதுள்ள கோபுரங்களையே பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (இதன் மூலம் சுமார் 360 மில்லியன் ரூபா பணத்தைச் சேமிக்க முடிந்துள்ளது).

- செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 27 ஆகும். அவர்களுள் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் 12 பணியாளர்கள் செயற்திட்டத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், எஞ்சிய பணியாளர்களை முழுமையாக

இணைத்துக் கொள்வதற்காக 2025.12.30 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- செயற்திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் திருகோணமலைப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா டெலிகொம் (SLT) நிறுவனத்திற்குச் சொந்தமான கோபுரம் மற்றும் கட்டடங்களைச் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தமாக, அந்நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் 2025.11.16 ஆம் திகதி கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

- வருட இறுதியளவில், கொள்முதல் நடவடிக்கைகளுக்குரிய ஆரம்பகட்ட வடிவமைப்புப் பணிகள் மற்றும் தரவு சேகரிப்புப் பணிகளில் இக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்தின் நிதி முன் னேற்றம்

2025 ஆம் ஆண்டுக்கான நிதியுதவியாக, உள்நாட்டுச் செலவினங்களுக்காக 50 மில்லியன் ரூபாவும், வெளிநாட்டுக் கடனாக 100 மில்லியன் ரூபாவும் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்ததோடு, 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இவ்வருடத்தில் உள்நாட்டு நிதியிலிருந்து 36.26 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டுக் கடனாக 700 மில்லியன் ரூபா மேலதிக விசேட ஒதுக்கீடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் விசேட ஒதுக்கீட்டுத் தொகை 800 மில்லியன் ரூபாவாகும். இதில் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான செலவினம் 562.03 மில்லியன் ரூபாவாகும்.

நிதியீட்டம்	விபரம்	ஒதுக்கீடு 2025 (ரூ.மில்.)	மேலதிக ஒதுக்கீடு 2025 (ரூ.மில்.)	மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்.)	2025 ஆண்டுக்கான செலவு (ரூ.மில்.)	சதவீதமாக (%)
17	வெளிநாட்டு நிதியீட்டம் சார்ந்த உள்நாட்டு நிதியீட்டம்	50	-	50	36.26	73
12	வெளிநாட்டுக் கடன்	100	700	800	562.03	70
மொத்தம்		**150**	**700**	**850**	**598.29***	**70***

* 2025 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குரிய வெளிநாட்டுக் கடனின் (12) கீழ் செலுத்தப்பட வேண்டியிருந்த 121.82 மில்லியன் ரூபா கட்டணங்கள், தொழில்நுட்பக் காரணங்களினால் 2026 ஜனவரி மாதத்திலேயே செலுத்த வேண்டியிருந்தது. குறித்த தொகையும் 2025 ஆம் ஆண்டிற்குரிய செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 சவால்கள்

2.2.1 அரசாங்க ஊடக நிறுவனங்களை சுயநிதி ஏற்பாடுகளின் கீழ் இயங்கும் நிறுவனங்களாக மாற்றுதல்.

அரசாங்க ஊடக நிறுவனங்களை சுயநிதி நிறுவனங்களாக மாற்றுவதன் மூலம் அரசாங்கத்தின் நிதிச் சுமையைக் குறைத்தல், வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு இடையிலான போட்டித்தன்மையை உயர்த்துதல் போன்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும்போது ஒரு பொதுச் சேவை ஊடகத்தின் அடிப்படை நோக்கங்களைப் பாதுகாத்து, நிதிச் சுதந்திரத்திற்கும் சமூகப் பொறுப்புக்கூறலுக்கும் இடையில் சமநிலையைப் பேணுவது இன்றியமையாததாகும். இங்கு வர்த்தக மற்றும் முகாமைத்துவ வினைத்திறனை அதிகரிப்பது அவசியமாவதுடன், சுய வருமானத்தின் மூலம் புதிய தொழில்நுட்பம், டிஜிட்டல் தளங்கள் மற்றும் புதிய ஊடகச் சேவைகளை அபிவிருத்தி செய்துகொள்வதன் ஊடாக, தனியார் ஊடக நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கான உயர் சாத்தியக்கூறுகள் கட்டியெழுப்பப்படும். அத்துடன் அதிகளவிலான பார்வையாளர்கள் மற்றும் நேயர்களின் ஈர்ப்பையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

2.2.2 சமூக ஊடகங்களின் அதிவேக விரிவாக்கமும் போலித் தகவல்கள் பரவுதலும்.

தற்போதைய டிஜிட்டல் யுகத்தில், சமூக ஊடகங்கள் மக்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பிரதான வழிகளில் ஒன்றாக மாறியுள்ளன. முகநூல், யூடியூப், இன்ஸ்டாகிராம், டிக்டொக் போன்ற தளங்களின் ஊடாக சில வினாடிகளுக்குள் இலட்சக்கணக்கான மக்களிடையே தகவல்கள் பரவக்கூடும். இந்த அதிவேக விரிவாக்கம் தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கிய போதிலும், உறுதிப்படுத்தப்படாத அல்லது போலித் தகவல்கள் பரவும் அபாயத்தை பெருமளவில் அதிகரித்துள்ளது. இவ்வாறான போலித் தகவல்கள் பரவுவதன் முக்கிய விளைவுகளில் ஒன்று மக்களின் நம்பிக்கை சீர்குலைவதாகும். அதேபோன்று, போலித் தகவல்கள் சமூக நெருக்கடிகளையும் மோதல்களையும் உருவாக்குவதற்கும் காரணமாக அமையலாம். விசேடமாக தேசிய, மத அல்லது அரசியல் ரீதியாக உணர்வுப்பூர்வமான விடயங்கள் தொடர்பாகப் பரவும் பொய்த் தகவல்கள், இனக் குழுக்களுக்கு இடையே அமைதியின்மை, வெறுப்புணர்வு மற்றும் மோதல்களை வளர்க்கக்கூடும்.

2.2.3 தொழில்சார் ஒழுக்கநெறிகள் தொடர்பான பிரச்சினைகள்

ஊடகத்துறையில் தொழில்சார் ஒழுக்கநெறிகள் என்பது, ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் தகவல்களைத் திரட்டுதல், உறுதிப்படுத்தல் மற்றும் பரப்புரை செய்யும்போது பின்பற்ற வேண்டிய நெறிமுறை மற்றும் தொழில்சார் தரநிலைகளாகும். உண்மைத்தன்மை, துல்லியம், நடுநிலைமை, நியாயத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் தனிமனித சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல் ஆகிய கோட்பாடுகள் அதன் அடிப்படை அம்சங்களாகும். எவ்வாறாயினும், இலங்கையின் ஊடகத்துறையில் இந்த ஒழுக்கநெறிகள் தொடர்பான நிலைமை சிக்கலாக உள்ளதாகக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தொழில்சார் ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடிப்பது ஊடகவியலின் நம்பகத்தன்மையையும் தரத்தையும் பேணுவதற்கு இன்றியமையாததாகும். இந்த சவாலான நிலைமையைச் சாதகமான மட்டத்திற்கு கொண்டுவந்து, ஒரு நல்ல ஊடகக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம், மக்களுக்கு நம்பகமான தகவல்களை வழங்குவதற்கும் ஜனநாயகச் சமூகத்தை வலுப்படுத்துவதற்கும் இயலும்.

2.2.4 தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி மட்டங்கள்

ஊடகத்துறை வேகமாக மாறிவரும் தொழில்நுட்பச் சூழலொன்றில் இயங்குகிறது. டிஜிட்டல் ஊடகம், சமூக ஊடகம், தரவு ஊடகவியல், செயற்கை

நுண்ணறிவு (AI), பல்லூடக உள்ளடக்க உருவாக்கம் மற்றும் இணையவழிச் செய்தி அறிக்கைப்படுத்தல் போன்ற புதிய போக்குகள் காரணமாக, ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக புதிய திறன்களைப் பெற்றுக்கொள்வது அவசியமாகியுள்ளது. இது ஊடகத்துறையின் தரம் மற்றும் போட்டித்தன்மையை நேரடியாகப் பாதிக்கும் ஒரு சவாலாகும்.

2.2.5 **சமூக ஊடகப் பயன்பாடு பரவலடைந்தமையால் பாரம்பரிய ஊடகத்துறை கடுமையான அழுத்தத்திற்குள்ளாதல்.**

தற்போதைய டிஜிட்டல் யுகத்தில், சமூக ஊடகங்கள் மக்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பிரதான வழிகளில் ஒன்றாக மாறியுள்ளன. இந்நிலைமை காரணமாகப் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற பாரம்பரிய ஊடக நிறுவனங்கள் கடுமையான போட்டிக்கு முகம் கொடுத்துள்ளன. இலங்கையின் ஊடகத்துறையைப் பாதிக்கும் முக்கிய சவால்களுக்குள் சமூக ஊடகங்களுடனான இந்த போட்டி மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

2.2.6 **டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்குப் பழக்கப்படுதல்.**

21 ஆம் நூற்றாண்டின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் புரட்சியுடன் ஊடகத்துறை பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. சமூக ஊடகங்கள், செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தால் மக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விதம் கணிசமாக மாறியுள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்குப் பழக்கப்படுவது இலங்கையின் ஊடகத்துறைக்கு ஒரு சவாலாக இருக்கும் அதேவேளை, ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. தொழில்நுட்ப மாற்றங்களுடன் இணைந்து பயணிக்காவிட்டால், ஊடக நிறுவனங்களால் போட்டித்தன்மையைத் தக்கவைத்துக்கொள்வது கடினமாகிவிடும்.

இலங்கையின் ஊடகத்துறை பொருளாதார நெருக்கடிகள், டிஜிட்டல் போட்டி, போலிச் செய்திகள், தொழில்சார் ஒழுக்கநெறிகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் போன்ற பன்முகச் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இச்சவால்களை வெற்றிகொள்வதற்கு, சுதந்திரமான ஊடகச் சூழலை உருவாக்குதல், ஊடகவியலாளர்களின் தொழில்சார் பயிற்சிகளை மேம்படுத்தல், டிஜிட்டல் மாற்றத்தை வலுப்படுத்தல், போலிச் செய்திகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் மக்களின் ஊடக அறிவுத்திறனை உயர்த்துதல் என்பன இன்றியமையாதவைகளாகும்.

ஒட்டுமொத்தமாக, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், மக்களுக்குத் துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களை வழங்குவதற்கும்,

இலங்கையின் ஊடகத்துறை இச்சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வது மிக முக்கியமானதாகும்.

2.3 எதிர்கால இலக்குகள்

i. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ள ஊடக கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்துதல்களை நடைமுறைப்படுத்தல்.

ii. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் தகவல்களை அணுகுவதை விரிவுபடுத்தல்.

iii. ஊடகவியலாளர்களை அறிவு மற்றும் அனுபவத்தால் வலுப்படுத்தல்.

iv. ஊடக அறிவை மேம்படுத்தல்

v. ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்

vi. ஊடக ஒழுக்கவிழுமிய முறைமையொன்றை அறிமுகம் செய்தல்

செயலாளர்

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

அத்தியாயம் 03

2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

ஏசீஏ- 1

2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான வருமானக் கூற்று

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர : செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு **செலவினத் தலைப்பு இல : 111**

ரூ.

வருமானக் குறியீடு	வருமான விபரம்	குறிப்பு	வருமான மதிப்பீடு (1)		வருமானம் சேகரிப்பு (2)			(3)	வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல் (4)			(5)
			ஆரம்ப மதிப்பீடு 1 (i)	திருத்திய மதிப்பீடு 1(ii)	ஏற்புடைய அமைச்சு/ திணைக்களத்தினால் சேகரித்தல் 2(i)	வேறு அமைச்சு/ திணைக்களத்தினால் சேகரிப்பு (SA-21-1) 2(ii)	மொத்தம் 2 (iii)=2(i)+2(ii)	நிலுவை வருமானம் சேகரிப்பு	பணத்தினால்	பிழைகளை சரி செய்தல்	மொத்தம் 4(iii)=4(i) +4(ii)	தேறிய வருமானம் 5=2(iii)+(3)-4(iii)
1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி		130,000,000	130,000,000	92,822,000	-	92,822,000	5,897,800	-	-	-	98,719,800

....

திகதி | பிரதான நிதி அதிகாரி/ பிரதம கணக்காளர்/ | வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் கையொப்பம்

ஏசீஏ - 1 (i)

2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிலுவை வருமானக் கூற்று

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர : செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு **செலவினத் தலைப்பு இல : 111**

முன்னைய 3 நிதி ஆண்டுகளுக்கு தேறிய வருமானம் சேகரிப்பு	**வருடம் 1**	**(2022)**	**ரூ. 215,020,000**
	வருடம் 2	**(2023)**	**ரூ. 150,450,000**
	வருடம் 3	**(2024)**	**ரூ. 123,750,000**

ரூ

காலப்பிரிவு	வருமானக் குறியீடு	வருமான விபரம்	வருடத்தின் ஆரம்ப மீதி (1)	அறிக்கையிடப்படும் ஆண்டுக்கான நிலுவைத் தொகை (2)	அறவீடு (3)	பதிவழிக்கப்பட்ட நிலுவை வருமானம் (4)	வருட இறுதி மீதி 5=(1)+(2)-[(3)+(4)]
(1) அறிக்கையிடப்பட்ட ஆண்டுக்கான நிலுவைத் தொகை	1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி					
உப மொத்தம்							
(2) கடந்த ஆண்டுக்கான நிலுவைத் தொகை	1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி					
உப மொத்தம்							
(3) கடந்த ஆண்டுக்கு முன்னைய ஆண்டுக்கான நிலுவைத் தொகை	1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி	25,220,500		5,030,000	-	20,190,500
உப மொத்தம்			**25,220,500**	**-**	**5,030,000**	**-**	**20,190,500**
மொத்தம்			**25,220,500**	**-**	**5,030,000**	**-**	**20,190,500**

....

திகதி: பிரதான நிதி அதிகாரி/ பிரதம கணக்காளர்/ நிதிப் பிரிவின் தலைவரின் பெயர் மற்றும் கையொப்பம்

வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்
வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்
வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

ஏசீஏ - 1 (ii)

ஆரம்ப வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீட்டுக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்குதல்

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர : செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு **செலவினத் தலைப்பு இல : 111**

ரூ.

வருமானக் குறியீடு	விபரம்	ஆரம்ப மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	வித்தியாசம் ஆரம்ப வருமான மதிப்பீடாக % வித்தியாசம்	வித்தியாசத்திற்கான காரணம்
1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி	130,000,000	130,000,000	-	-

……………………	…………………………………………	…………………………………………………
திகதி:	பிரதான நிதி அதிகாரி/ பிரதம கணக்காளர்/ நிதிப் பிரிவின் தலைவரின் பெயர் மற்றும் கையொப்பம்	வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின்கையொப்பம் வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பெயர் வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

ஏசீஏ - 1 (iii)

திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் உண்மையான வருமான மதிப்பீட்டுக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்குதல்

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர : செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு **செலவினத் தலைப்பு இல : 111**

ரூ

வருமானக் குறியீடு	விபரம்	திருத்திய வருமான மதிப்பீடு	உண்மையான வருமானம்	திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் உண்மையான வருமானத்திற்கும் இடையிலான வித்தியாசம்	வித்தியாசம் திருத்திய வருமான மதிப்பீட்டின் % ஆக	வித்தியாசத்திற்கான காரணம்
1002.13.00	டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி	130,000,000	98,719,800	(31,280,200)	-24%	வரி செலுத்தி ஒளிபரப்பு செய்யப்படும் டெலிநாடகங்கள், திறைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகைள வரையறுத்தல்

....

திகதி:

....

பிரதான நிதி அதிகாரி/ பிரதம கணக்காளர்/
நிதிப் பிரிவின் தலைவரின் பெயர் மற்றும் கையொப்பம்

....

வருமானக் கண்கீட்டுஉத்தியோகத்தரினகையொப்பம்
வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்
வருமானக் கண்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

அறிக்கையிடும் அடிப்படை

1. **தயாரிப்பதற்கான நோக்கம்**
நிதிக் கூற்றுக்கள், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதி அரச கணக்குகள் வழிகாட்டு நெறிகள் இலக்கம் 06/2024 இன் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

2. **அறிக்கையிடப்படும் காலப்பகுதி**
2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்கான காலப்பகுதியாகும்.

3. **அளவீட்டின் அடிப்படை**
நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் மீது தயாரிக்கப்பட்டுள்ளதோடு, சில சொத்துக்களின் வரலாற்றுச் செலவு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு விருத்தி செய்யப்பட்டுள்ளது. வேறு முறையில் குறிப்பிடப்படாதபோது கணக்குகளைத் தயாரிக்க விருத்தி செய்யப்பட்ட பணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

   நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

4. **வருமானங்களை இனம்காணல்**
பரிமாற்றம் செய்யக்கூடிய மற்றும் பரிமாற்றம் செய்யமுடியாத வருமானங்கள் அவை பெறப்பட வேண்டிய காலப் பிரிவைக் கருத்திற்கொள்ளாது பணம் கிடைக்கப்பெறும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படும்.

5. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை இனம்காணல் மற்றும் அளவிடல்**
சொத்துக்கு ஏற்புடைய எதிர்கால் பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் என்ற உறுதிப்பாடு உள்ளபோது மற்றும் அந்தச் சொத்துக்கள் சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என இனம்காணப்படும்.

   சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவுக்கு இனம்காணப்படுவதோடு செலவு மாதிரி ஏற்புடையதாகாத சந்தர்ப்பங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படும்.

6. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு**
இந்த ஒதுக்கு கணக்கு சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு நேரொத்த கணக்காகும்.

7. **காசும் காசுக்கு சமமானவையும்**
2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கையிலுள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைக் கொண்டு காசும் காசுக்கு சமமானவையும் கணக்கிடப்படும்.

- ஏதேனும் அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விசேடமான கொடுக்கல் வாங்கல்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் அந்த தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிக்கொள்ள முடியும். அவ்வாறே, “அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் அந்த விசேட கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்களை உள்ளடக்க முடியும்.

- தனது அறிக்கையிடும் நிறுவனத்திற்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைகளை மாத்திரம் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்த முடியும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1002-13-00	டெலி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்கான வரி	130,000	130,000	98,719	76%

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதிஒதுக்கீடு		
மீண்டுவரும்	496,000	496,000	412,408	83%
மூலதனம்	228,000	928,000	429,624	46%
மொத்தம்	**724,000**	**1,424,000**	**842,032**	**59%**

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா, 000

தொ. இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	தேர்தல் ஆணைக்குழு	தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவு	859	859	857	99%
02	ஜனாதிபதி அலுவலகம்	கிளீன் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித்திட்டம்	270,000	270,000	267,048	99%

03	ஜனாதிபதி அலுவலகம்	ஆசிய-பசிபிக் ஒலிபரப்பு ஒன்றியத்தின் காலநிலை நடவடிக்கை மற்றும் அனர்த்த தயார்நிலை பற்றிய மாநாடு	20,000	20,000	20,000	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா ,000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 திகதியசுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	2024.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	57,533	57,533	-	100%
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	452,585	452,585	-	100%
9153	காணி	257,000	257,000	-	100%
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-	-	

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளரின் அறிக்கையின் சிங்களப் பிரதி இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

	குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%)உண்மையான வெளியீடு			
		100% - 90%	75% - 89%	50% - 74%	0% - 49%
1	ஔிபரப்பு சட்டத்தை வரைதல்	✓	-	-	-
2	தகவல் அறியும் உரிமையை ஊக்குவிப்பதற்காக அலுவலர்களை அறிவூட்டல்	✓	-	-	-
3	தொழில்துறை ஊடகவியலாளர்களை உருவாக்குதல்				
3.1	எசிதிசி ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்	✓	-	-	-
3.2	ஊடகவியலாளர்களுக்கு உயர் கல்வி நிறுவனமொன்றை தாபிப்பதற்கான சட்டமூலத்தை வரைவு செய்தல் (இலங்கை பட்டய ஊடக நிறுவனம்)	✓	-	-	-

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) பூரணப்படுத்தும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

பொறுப்புள்ள ஊடக சம்பிரதாயமொன்றை உருவாக்குவதற்கு வசதியளிப்பதோடு, ஊடக செயற்பாட்டின் சிறப்பை நோக்கிப் பயணித்தல்.

இலக்கு / குறிக்கோள்	அடைவுகள் (உகலாவிய)	அடைந்துகொள்வதற்கான குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் 0% - 49%	50% - 74%	75%- 100%
4.தரமான கல்வி	4.4 2030 ஆம் ஆண்டளவில் தொழில்வாய்ப்பு, சுனிசி தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் தொழிற்திறன் உள்ளிட்ட ஏற்புடைய திறமைகள் உள்ள இளைய சமூகத்தையும் வயதுவந்த சமூகத்தையும் படிப்படியாக அதிகரித்தல்.	தேசிய ஊடக உயர் கல்வி நிறுவனத்தை நிறுவுவதற்காக (Chartered Institute of Journalists – Sri Lanka) சட்டத்தை வரைவுசெய்தல்			✓
		எசிதிசி வெகுசன ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்			✓
16. சமாதானம் நீதி மற்றும் வழுவான நிறுவனங்கள்	16.10 தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்க அமைய பொதுமக்கள் தகவல்களை அறிந்துகொள்வதிலுள்ள இயலுமையை உறுதிசெய்து	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்			
		அ) பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்			✓

	அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.	ஆ) தகவல் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் (அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களும்)			✓
		இ) சர்வதேச தகவல் தினத்திற்காக செயலமர்வை ஒழுங்கு செய்தல்			✓
		ஈ) தகவல் உத்தியோகத்தர்களுக்கு கையேடுகளை அச்சிட்டு வழங்குதல்			✓

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

வெற்றிகள் :

i. ஊடகத்துறையில் பணிபுரியும் ஊடகவியலாளர்களின் தொழில்முறைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனத்திற்கு இணையாக 'இலங்கை பட்டய ஊடகவியலாளர்கள் நிறுவனம்' (Chartered Institute of Media Professionals of Sri Lanka) என்ற பெயரிலான சுயாதீன நிறுவனமொன்றை, பெரிய பிரித்தானியாவில் தற்போதுள்ள பட்டய ஊடக நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்க அனுசரணையுடன் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், 'Chartered Institute of Media Professionals of Sri Lanka Bill' என்ற சட்டமூலம் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அச்சட்டமூலம், சட்டமா அதிபரின் சான்றளிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக சட்ட வரைஞரால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ii. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமப்படுத்தும் பொறுப்பு இந்த அமைச்சால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த செயன்முறையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கென தனியான பிரிவொன்று அமைச்சில் நிறுவப்பட்டுள்ளது. சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனைத்துப் பணிகளிம் அப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. 2016 இல 12 எனும் தகவல் அறியும் சட்டத்தின் 11 ஆம் பிரிவுக்கு அமைய தகவல் அறியும் ஆணைக்குழு பொது அதிகாரசபைகளை கண்காணிப்பதற்கும் தகவல் சட்டத்தை அமுல்படுத்தும் நோக்கிலும் நிறுவப்பட்டுள்ளது.

சவால்கள் :

i. அனைத்து அரசாங்க பிரவேசத்திற்காகவும் அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் கூட்டு செயற்பாடுகளை இனங்காணல் மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடலுக்கு வழியேற்படல்

ii. தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன் ஊடகத் துறைக்கு ஏற்ற வகையில் அரசாங்க ஊடக நிறுவனங்களை நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு வலுப்படுத்தல்.

iii. இந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்காக தனியார் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்

iv. பேண்தகு அபவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஊடக ஒத்துழைப்பை வழங்குவதற்கு அரசாங்க ஊடக நிறுவனங்களுக்குப் போதியளவு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை.

v. அனுமதிக்கப்பட்ட ஆளணியை பூரணப்படுத்திக்கொள்ள முடியாமல் போயுள்ளதால் பயனுள்ள செயற்பாட்டுக்கு தடை ஏற்படல்.

vi. பொது அதிகாரசபைகள் மற்றும் தகவல் அறியும் ஆணைக்குழுவை தொடர்புபடுத்தி வலையமைப்புபடுத்தும் பணி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளல்.

vii. பொதுமக்கள் தொடர்பை அடிக்கடி மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளுடன் பிரிவொன்றை நிறுவுதல்.

viii. சர்வதேச மட்டத்தில் ஊடக தொழில் வல்லுநர்களை உருவாக்குதல்.

ix. அரசாங்க மற்றும் தனியார் துறையுடன் சிறந்த தரமான ஊடக கலாசாரமொன்றை உருவாக்குதல்.

x. புதிய ஊடகத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடுத்து ஊடக அறிவின் மூலம் ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தல்.

அத்தியாயம் 06

மனிதவள விபரம்

மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட மட்டம்	24	14	10
மூன்றாம் நிலை	05	03	02
இரண்டாம் நிலை	97	67	30
ஆரம்ப நிலை	31	20	10
மொத்தம்	**157**	**104**	**52**

6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

செயன்முறைகளை கொண்டுநடாத்தும் போது பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் அவற்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

6.3 மனிதவள அபிவிருத்தி

பாடநெறியின் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா '000)		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு)	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு		
சாரதி பயிற்சிப் பட்டறை	10	01 நாள்	13,775.00	-	உள்நாட்டு	சாரதி சேவையின் பொறுப்பு, கடமை மற்றும் ஒழுக்கநெறிகள் குறித்து சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல்
சம்பள மாற்றப் பட்டறை	4	02 நாள்	52,000.00	-	உள்நாட்டு	சம்பளம் தயாரித்தல் (Payroll Training) தொடர்பாக அமைச்சில் விழிப்புணர்வூட்டல்
பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகளுக்கான புதிய கொள்முதல் வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தல்.	1	02 நாள்	13,000.00	-	உள்நாட்டு	அரசாங்க கொள்முதல் செயல்முறை குறித்து அடிப்படை புரிதலை வழங்குதல்
தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்கள்	1	02 நாள்	13,000.00	-	உள்நாட்டு	தகைமைக்கான் தடைப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை

						உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்
'கிளீன் ஶ்ரீலங்கா' நிகழ்ச்சித்திட்டம்	250	01 நாள்	62,875.00	-	உள்நாட்டு	'கிளீன் ஶ்ரீலங்கா' (தூய்மையான இலங்கை) திட்டத்தின் அடிப்படை நோக்கங்களை விளக்குதல்
புதிய கொள்முதல் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வெளியில் நடத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சித் திட்டம்	5	01 நாள்	92,500.00	-	உள்நாட்டு	நிறுவன கொள்முதல் நடவடிக்கைகளை திறம்படவும் வினைத்திறனுடனும் பேணுதல் மற்றும் சேவையின் தரத்தை உயர்த்துதல்
உள்ளக அலுவல்கள் பிரிவு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	58	01 நாள்	14,021.66	-	உள்நாட்டு	உள்விவகாரங்கள் குறித்து உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
சர்வதேச உறவுகளுக்கான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா	1	01 வருடம்	154,775.00	-	உள்நாட்டு	சர்வதேச உறவுகள் குறித்து விழிப்புணர்வைப் பெறுதல்
வரிகள் தொடர்பான பாடநெறி	2	06 மாதம்	190,000.00	-	உள்நாட்டு	வரிகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல்.
புதிய கொள்முதல் பயிற்சித் திட்டம்	158	02 நாள்	560,131.55	-	உள்நாட்டு	நிறுவன கொள்முதல் நடவடிக்கைகளை திறம்படவும் வினைத்திறனுடனும் பேணுதல் மற்றும் சேவையின் தரத்தை உயர்த்துதல்

அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்க ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் - பகுதி II இனைத் தயாரித்தல்	2	01 நாள்	-	-	உள்நாட்டு	நிறுவன உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு குறித்து விழிப்புணர்வூட்டல்
அனர்த்த முகாமைத்துவச் சட்டகம் மற்றும் உள்ளக கட்டுப்பாடு குறித்த பயிற்சித் திட்டத்திற்காக இடர்க்குழு உறுப்பினர்களைப் பெயரிடும் பயிற்சி	4	01 நாள்	-	-	உள்நாட்டு	இடர் மேலாண்மை மற்றும் உள்வாரி கட்டுப்பாடு குறித்து உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்
சாரதி பயிற்சிப் பட்டறை	10	01 நாள்	9,400.00	-	உள்நாட்டு	சாரதி சேவையின் பொறுப்பு, கடமை மற்றும் ஒழுக்கநெறிகள் குறித்து சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல்
கோப்பிடுதல் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுதல்	23	01 நாள்	101,800.00	-	உள்நாட்டு	தகைமைக்கான் தடைப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்

எக்செல் பயிற்சிப் பாடநெறி	4	02 நாள்	60,000.00	-	உள்நாட்டு	'Advanced Excel' (மேம்பட்ட எக்செல்) குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல்.
கோப்பிடுதல் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுதல்	24	01 நாள்	102,000.00	-	உள்நாட்டு	தகைமைக்கான் தடைப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்
மொத்தம்	**557**		**1,439,278.21**			

பாடநெறியின் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூ)		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு)	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளிநாட்டு		
Capacity Building on Digital Governance in India	01	02 வாரம்	-	92,187.38	வெளிநாட்டு	இந்தியாவின் டிஜிட்டல் ஆளுகை (Digital Governance) பற்றிய புரிதலைப் பெறுதல்.
Seminar on New Productive forces in Media of Indian Ocean region countries	01	02 வாரம்	-	146,923.17	வெளிநாட்டு	இந்தியப் பெருங்கடல் பிராந்திய நாடுகளின் ஊடகங்கள் பற்றிய பரந்த புரிதலையும் புதிய ஊடகங்கள் (New Media) பற்றிய புரிதலையும் பெறுதல்.
Seminar on Public Financial Management for Sri Lanka	01	02 வாரம்	-	146,948.06	வெளிநாட்டு	இலங்கையில் அரசுப் பொதுநிதி முகாமைத்துவத்தை திறம்படச் செயல்படுத்துவது குறித்த புரிதலைப் பெறுதல்.
உப மொத்தம்	**03**	**-**	**-**	**386,058.61**	-	
மொத்தம்	**560**	**-**	-	**1,825,336.82**	-	

6.4 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு

ஏற்புடைய விடயங்களில் உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, நிறுவனத்தின் செயலாற்றுகை மற்றும் பொதுமக்கள் சேவைகளை வழங்கும் போது வினைத்திறனில் மேம்பாடு அவதானிக்கப்பட்டது.

அத்தியாயம் 07

இணைக்கப்பாட்டு அறிக்கை

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிஅறிக்கைகள்	**தலைப்பு இல 111 இன் ஏற்புடைய கணக்குகளைத் தயாரிப்பதற்கு தகவல்கள் சுகாதாரப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.**		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு			
1.3	வணிகமற்றும்உற்பத்திமுற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	**ஏற்புடையதன்று**		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	**ஏற்புடையதன்று**		
1.5	சிறப்புமுற்பணக் கணக்கு	**ஏற்புடையதன்று**		
1.6	ஏனைய	**ஏற்புடையதன்று**		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல்** (**நி.பி.**445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		

2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	**இணக்கமானது**		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	**இணக்கமானது**		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	**இணக்கமானது**		
3.3	ஒவ்வொருகொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம்	**இணக்கமானது**		

	இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.			
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல .171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	**இணக்கமானது**		
4	**வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	**இணக்கமானது**		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	**இணக்கமானது**		
4.3	வருடாந்த உள்ளககணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	**இணக்கமானது**		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	**இணக்கமானது**		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	**சுகாதாரப் பிரிவினால் சமர்ப்பிக்கப் படும்**		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	**இணக்கமானது**		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி .பி.134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு	**இணக்கமானது**		

	திட்டம் தயாரித்தல்			
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	**இணக்கமானது**		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	**இணக்கமானது**		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	**இணக்கமானது**		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	**இணக்கமானது**		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதனமுகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்துபெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	**இணக்கமானது**		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை	**இணக்கமானது**		

	அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.			
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	**இணக்கமானது**		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	**இணக்கமானது**		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	**இணக்கமானது**		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	**இணக்கமானது**		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	**இணக்கமானது**		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல்வேண்டும்	**இணக்கமானது**		

9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	**இணக்கமா னது**		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	**இணக்கமா னது**		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	**இணக்கமா னது**		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	**இணக்கமா னது**		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	**இணக்கமா னது**		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	**இணக்கமா னது**		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	**இணக்கமா னது**		
11.2	நி.பி .94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாதபொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	**இணக்கமா னது**		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			

12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	**இணக்கமானது**		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	**இணக்கமானது**		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	**இணக்கமானது**		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	**இணக்கமானது**		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கமானது**		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	**சுகாதாரப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது**		
14.2	நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	**இணக்கமானது**		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	**இணக்கமானது**		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	**சுகாதாரப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது**		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	**இணக்கமானது**		

15.2	திரட்டப்பட்ட வருமானம்வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	**இணக்கமானது**		
15.3	நி.பி176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	**இணக்கமானது**		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	**இணக்கமானது**		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	**இணக்கமானது**		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	**இணக்கமானது**		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	**இணக்கமானது**		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்.	**இணக்கமானது**		

17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	**இணக்கமானது**		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	**இணக்கமாணது**		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	**இணக்கமாணது**		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல . 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	**இணக்கமானது**		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட	**இணக்கமானது**		

	மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.			
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	**இணக்கமானது**		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	**இணக்கமானது**		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	**இணக்கமானது**		

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No.	එම්ඊඩී/බී/එම්ඕඑච්/ 02/2025/14	
ඔබේ අංකය / உமது இல. / Your No.		
දිනය / திகதி / Date	2026 මැයි 29 දින	

2326575
01 JUN 2026
CFO-III

ලේකම්,
සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

සෞඛ්‍ය අමාත්‍යාංශයේ 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව

යථෝක්ත වාර්තාව මේ සමඟ එවා ඇත.

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
02 JUN 2026
ගිණුම් අංශය

කේ.කේ.එස්. ජයකොඩි
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත :- රාජ්‍ය ගිණුම් අධ්‍යක්ෂ ජනරාල්, රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව, මහා භාණ්ඩාගාරය

FCCD
1007
02 JUN 2026
ආරක්ෂණ හා සම්බන්ධිකරණ අංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

எம்ஈடபிள்யு/பீ/எம்ஔஎச்/ 02/2025/14 2026 மே 29 ஆம் திகதி

செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைப்பு 111 – சுகாதார அமைச்சின் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 2018 இல 19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் சுருக்க அறிக்கை

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம்

1.6.1 நிதிசாரா சொத்துக்கள்

(ஔ) 5 முதல் 15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், உரிமை வெகுசன ஊடக அமைச்சுக்கு மாற்றப்பட்ட 3 வாகனங்களின் செலவான ரூ. 128 மில்லியனைக் கணக்கில் கொள்ளத் தவறியதன் காரணமாக, நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) வெகுசன ஊடக அமைச்சினால் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று தபால் திணைக்களத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்த 4 வாகனங்களின் செலவான ரூ. 20.20 மில்லியன், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருந்ததன் காரணமாக, நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

(அ) 2024 ஆம் ஆண்டில் டெலிநாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் மீதான வரியின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 121.4 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை, 2025 ஆம் ஆண்டில் அது ரூ.94.15 மில்லியனாகக் குறைந்திருந்தது. இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.4 சதவீத வருமான வீழ்ச்சியாகும்.

(ஆ) இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 20 மில்லியன் தொகை, 12 முதல் 19 வருடங்களாக நிலுவையில் இருந்த போதிலும், 2026 மார்ச் 31 ஆம் திகதியன்று கூட அதனை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய 12/1037/37/019-1 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, செய்தி இணையத்தளங்கள் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், வருடாந்தம் புதுப்பிக்கப்படவும் வேண்டும். எனினும், 2024 ஆம் ஆண்டில் பதிவை புதுப்பிக்காத 19 இணையத்தளங்களுக்காக ரூ.190,000 தொகையும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் ரூ.300,000 தொகையும் இழக்கப்பபட்டிருந்தது.

(ஈ) 2024 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்களின் எண்ணிக்கை 30 ஆகக் காணப்பட்ட போதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் அது 16 ஆக மாத்திரமே காணப்பட்டது. இவ்வாறு புதிய பதிவுகள் கிட்டத்தட்ட 50 சதவீதத்தால் குறைந்திருந்ததற்குக் காரணம் பாதுகாப்பு அமைச்சின் கீழான அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பதும், 24 இணையத்தளங்களுக்கு இவ்வாறு அனுமதி கிடைப்பதில் தாமதம் நிலவுவதும் அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் ரூ. 240,000 நேரடி வருமானம் இழக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

4. செயல்பாட்டு மீளாய்வு

4.3 சொத்து முகாமைத்துவம்

(ட) உரிமை வெகுசன ஊடக அமைச்சிடம் இருந்தபோதிலும், இவ்வறிக்கையின் திகதி வரை கணக்கில் சேர்க்கப்படாத ரூ. 39,500,000 செலவுடைய CAD-6806 இலக்கத்தைக் கொண்ட வாகனம், 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பழுது காரணமாக இயந்திரப் பொறியியலாளரால் பழுதுபார்க்கும் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க, வாகனமொன்றின் உள்ளக பழுதுபார்ப்புகளுக்கு இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் அறிக்கை பெறப்பட வேண்டும் என்ற போதிலும், அதற்கு முரணான வகையில், ஏற்புடைய நிறுவனத்திற்கு ரூ.15,000 செலுத்தி வாகனம் கழற்றப்பட்டிருந்தது. பழுதுபார்க்கப்படாமல் ஒரு மாதத்திற்குப் பிறகு அவ்வாகனம் மீண்டும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ஒப்படைக்கும் போது அதன் நிலைமை குறித்து முறையான வழிமுறையின் கீழ் பரிசோதனை செய்வதற்கு அமைச்சின் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இவ்வாகனத்தின் பழுதுபார்ப்புக்காக 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூ.4,274,849 செலவிடப்பட்டிருந்தது. இச்செலவானது, 2024 ஜனவரி 10 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2024 இற்கு முரணானது என அவதானிக்கப்பட்டது.

4.8 முகாமைத்துவப் பலவீனங்கள்

(ட) இரண்டரை வருட காலமாக தயாரிக்கப்பட்டுள்ள, 2022 ஜூலை 22 ஆம் திகதிய 2289/43 இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் ஒரு விசேட பணியாகவும் கடமையாகவும் இனம் காணப்பட்ட 'வெகுஜன ஊடகக் கொள்கை' இவ்வறிக்கையின் திகதி வரை நிறுவப்பட்டிருக்கவில்லை. இக்கொள்கையை வகுக்கும் பணிக்காக ரூ. 239,617 செலவிடப்பட்டிருந்தது.

(டி) 'எசிதிசி' வெகுசன ஊடக புலமைப்பரிசில் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2019 முதல் 2023 வரை ஊடகப் புலமைப்பரிசில் நன்மைகளைப் பெற்ற 116 ஊடகவியலாளர்களுக்காக ரூ.19,954,711 செலவிடப்பட்டிருந்தது. 2019 முதல் 2023 வரை புலமைப்பரிசில் வழங்கப்பட்ட 116 பேரில் 46 பேர் மாத்திரமே பாடநெறிகளை நிறைவு செய்து சான்றிதழ்களை சமர்ப்பித்திருந்தனர். ஏனைய 70 பேரும் பாடநெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழின் பிரதியொன்றை வெகுசன ஊடகப் பிரிவுக்கு வழங்கியிருக்கவில்லை. பாடநெறிகளை முறையாகப் பூர்த்தி செய்யாத புலமைப்பரிசில் பெற்றவர்கள் குறித்து முறையான மேற்பார்வையை மேற்கொண்டு, ஒப்பந்தத்தின் பிரகாரம் அப்பாடநெறிக்கான கட்டணங்களை மீள அறவிடுவதற்கோ அல்லது தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ இவ்வறிக்கையின் திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

Ministry of Health and Mass Media

ජනමාධ්‍ය අංශය
வெகுசன ஊடகப் பிரிவு
Mass Media Division

අංක. 163, ඇසිදිසි මැදුර, කිරුළපන මාවත, පොල්හේන්ගොඩ, කොළඹ 05
இல. 163, அசிதிசி மெதுர, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05
No. 163, Asi Disi Medura, Kirulapone Mawatha, Polhengoda, Colombo 05

දුරකථන / தொலைபேசி / Telephone
011-2513 459, 011-2512 321, 011-2513 498